19

உ

வேலு மயிலுந் துணை.

# சுப்ரமண்யர் சங்கீர்த்தனம்.

இஃது,

சென்னை இராயபுரம் வாசி திருவண்ணாமலை

குரு தேவ ராதீன பரம்பரை ஞானப்புலவனும்

சிவராஜ யோகீந்திரர்

வி. வே. கி. நாராயணசாமி பிள்ளை மாணவருமாகிய

பால்ய யோகி விசூர்-வேலைய தேசிகர்

அவர்களது அருள் மாணவர்

மதுரை ஜில்லா காரியப்பட்டி

க. வெள்ளைச்சாமி செட்டியாரால்

சென்னை:

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸ்ஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1919 வரு

விலை அணா 2.

Q26:417
N19
149234

உ

# சாற்றுக்கவி.

இஃது,

சேவ்வல்மா நகரம்

எம். எ. நெயினு முகம்மது பாவல ரியற்றியது.

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தென்னங் காவிற்பழங்கள் வீழ்ந்து கதலித்தாறு
சிதையத் தேன்போய்
முன்னங் காவிற்ப்பழனம் பாய்நாடு புடைசெறிந்த
மூதா ரென்னும்
அன்னகாவிற் றுயிலுஞ் சமரபுரி கந்தன்மேல்
அருள்வாய்க் கீர்த்நம்
பொன்னங்கா மலேமுநியுஞ் சிரமசைக்கப் பாடினனுற்
புகழ்வாங் கேண்மோ.

வேறு.

கற்கண்டு சருக்கரை முக்கனிரசத் தைக்கோம் தேனிற்
கலந்து கூட்டி
யற்கிண்டி மத்தித்த மதுரத்திற் கென்மடங்கா
யதற்கு மேலாஞ்
சொர்க்கொண்ட விசூர்வேலைய தேசிகன் பயந்த
சுமுக புத்ரன்
சர்கொண்டல் நிகர்வெள் ளேச்சாமியெனப் பேருயர்ந்த
தமிழ்வ லோனே.

நேரிசை வெண்பா.

சரவண சண்முகன்மேல் சங்கீர்த்தனஞ் சொற்றான்
பிரணவத்தை பெரிது பெற்றான்—வரபுலவீர்
மன்சொல்கேன் மால்வெள் ளேச்சாமிக் கிணையுலகில்
என்சொல்கேன் வானகத்து மின்றி.

149234
சென்னை-600 00

உ

கணபதி துணை.

# விநாயகர் துதி.

## வெண்பா.

கலைமக ளாசான் காலடி வணங்கி
நிலைபெரு கணபதி யருளா லுலகினிற்
சங்கீர்த் தனங்கட் சாற்றுதுஞ்
சர்வசித் தியுஞ் சார்தறற் பொருட்டே.

## கணபதி விருத்தம்.

நெஞ்சமே நானுவிதந்தனி லலைந்தாசை
நேசவா சாரந் தொட்டு
நின்றேக மாகக்கை கூப்பிசிர மேற்கொண்டுன்
னேசஉபதேச மோதி
வஞ்சைமா யைப்பினும் வாராம லொருவேலை
வைராக்ய தீப மேற்றி
வற்றுதயெண் ணையாம் பத்தியெனு நெய்பாச்சி
வளர்ந் தோங்கத் திரிதூண்டவே
பஞ்சையேன் படுகின்ற பாட்டுடைத் தலைவனே
பரஞானி யருட் புத்ரனே
பச்சரிசியெட் பொரி யவர்க்கடலை சர்க்கரை
பாகுமுக் கனி யமுர்தமும்
நெஞ்சமாரப் படைத் திடுமடியார் வீடுகளில்
நிர்த்தனஞ் செய்த தன்றி
நிம்பத்து நிழல்தனில் இன்புற்று வாழ்வுபெறும்
கம்பக்க ளிற்று கஜமே.

இராகம்-யமுனகல்யாணி-தாளம்-ரூபகம்.

ஆதிமூலனே சரணம் என்ற வர்ணமேட்டு.

பல்லவி.

மூலாதர கணபதி என்முன்னே வந்துதி.

அநுபல்லவி,

ஞாலமீதினி லுந்தன்பாலன் படுந்துயரை
நாதா தீர்த்தே நல்லருள் வைப்பாய்
நளினமுளரிபத தெரிசனஞ் சிரப்பாய். (மூ)

சரணங்கள்.

Q26:417 N19

சீலா கயமுகவர் களுக்கொரு
காலா ரணசூர பயங்கர
வேலா யுதனோடு வருந் துரை
சால க்ருபை பாலித்தாள் மறை. (மூ)

நெடுமேருவினில் மறைமுனி சொலுகந்தை
நோய்வடு கொடுவரை தீரா
நேசத்தால் மிகுபாசத் தோடேனை
யாள்சற்றே தயை தாங்த்யாசட. (மூ)

மலைபோல்மலி தமிழ்பெரு மாக்ஷியன்
மலர்போல் மணந்தரவருள் வேலய்யன்
கலைசேர் பதம்பணி விதரணமுள
தலைசீர் வெள்ளைச் சாமிதினந் துதி. (மூ)

வேலுமயிலுந் துணை.

# சுப்பிரமணியர் துதி.

## விருத்தம்.

பாழிபாவ மற்றசுஞ் ஞானிகட் பணிகின்ற
பாலஞானக் குரவனே
பரசமய கோளரி யெனப்பெயர் பூண்டவா
பகைபாச நாசகாலா
அழியாத கர்ப்புடைய சைவநெறி நிலையிலே
யாவல் வைத்தனுஷ் டிக்கவும்
அருசமய முடிவிலொரு தனிவிரத மாய்நின்ற
அத்விதா னந்தம் பெறவும்
கழியாது வீணிலே கண்ணருட் டந்திடும்
கனதிருப் போரூரனே
கன்னிகுற பெண்மகிழும் சின்னமுரு கேசனே
கற்றவக்கனு கூலனே
குழிமாதர் புண்ணிலே விழுகாத வைராக்யங்
கொடுத்தெனைக் கார்க்க வேண்டும்
குமரா திருச்சமர புரமே நிருத்தமிடு
கொடுவேற்ப் பிடித்த குகனே.

## கன்னிகள்.

வாமதுரைராணி சகல கலக்யாணி
வனசபவ வாணி
பாண்டிய குலமானி
அரிய தமிழ்பாது கார்க்குங் கீர்வாணி. (வா)

சோமச்சந்திர சேகர னரும்பாரி
சுதனுனைக் கோரி
பணிந்தேன் சிங்காரி
சுந்தரி மனோன்மணி வாகெம்பீரி. (வா)

அண்ட பகிரண்ட மீன்றிடுந் தாயே
ஆதிசத்தி நீயே
அம்பிகா என்தாயே
மிண்டனெனை தொண்டு கொண்டருள் வாயே. (வா)

பாவலர்க் குகந்தருளுந மீனாக்ஷி
பாலனென் மேல்சூக்ஷி
செய்யாதே. காமாக்ஷி
வேளையிது வெள்ளைச்சாமிமுன் னிப்போது. (வா)

காமாக்ஷியம்மன் துதி.

## கன்னிகள்.

சிங்குவார்த் தோட்டந் தங்கிவாழுங் காமாக்ஷி
யருளாச்சி செய்யாதே சூக்ஷி
தேசமெங்கினும் நீயல்லோ யெனக் காக்ஷி
காமாக்ஷி. (சிங்)

மங்களமிகு சங்கரி சிங்காரி கெம்பீரி
யேகாம் பரேசர்
மனதிற்கிசைந்த கனம் பொருந்திய
பாரி அலங் காரி. (சிங்)

எங்கள்குலத் துக்கிசைந்த அம்பிகை
நீயே யென் தாயே
மனமிரங் கா திருந்தால் ஏழையெப்படிப்பாரிலுய்ப்பது
ஆயே சொல் வாயே. (சிங்)

எங்கெங் கும்புகழ் தங்கும் சிங்கார
வேலன் அருள் பாலன்
மிகுஇனிய சரிதை யினியியற் றிடும்படி வரந்தா
வுன்சீலன் அனு கூலன். (சிங்)

உனதருள்பெற மனங்கசிந் துனைத்
தேடிக் கொண் டாடி.
வெள்ளைச் சாமிநீடி உலகினிலுனைப் பணிந்தேன்
பாமாலைசூடி கொண்டா டிடும்படி.

தாமதம் நாவிலுரைவாய் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

யேனினியுந் தாமதமே வா ஷண்முகமே
யேழையெந்தன் முன்னிதமே வா ஷண்முகமே.

அநுபல்லவி.

நானினி இந்தப் பாரினில் வெம்பித்
தேம்பித் திகைத் திடுவனோ. (வா)

சரணங்கள்.

மேதினியில் யான் கியாதிமிகவாய்
அகமகிழ்ந்திடு வரந் தா வேலவனே
கோலாகலக் குமறனே
நீலமயில் சுந்தரனே. (வா)

தினைக்கர்க்கும்மானை கனிவாய்ச்சேர்ந்தோனே
தினங்கனிந் துருகிநான் தியங்குரேனே.
மிகவருந்து ரேனே
அகமெலிந்து நானே. (வா)

வாலைமகிழும் பாலமகிபா
வேலைய்ய னருள் வெள்ளைச்சாமி
தனக்கோர் தொழில்காமி
ஏசுதெனை யிப்பூமி. (வா)

இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி.

இம்மாத்திரங் கருணையே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வர்மஞ் சாதிப்ப தேனைய்யா
வைய்யாபுரிகுகா வைய்யாபுரிகுகா
வரவிது தருணமைய்யா நீரென்மேல். (வர்)

அநுபல்லவி.

பிர்மஞான முணர்த்திக் கர்மவினை யறுக்குந்
தர்மவா னுன்னையல்லால் உண்மை சொல்வா ரிங்குண்டோ.

சரணங்கள்.

அடியே னெனையே ஆதரிப்பாயே
அரன்றருஞ் சேயே
ஆகமவேத புராணத்தின் தாயும் நீயே
அடமெனும்மாயை கெடக்களை வாயே
சேயேனைக் கார்ப்பதற்குத் தாயகமாயிருந்தும்.(வர்)

கந்தநாதா யெந்தன்மேல் வாதா
கருணை வாாதா
காசினிதன்னில் நீயல்லோயென் மாதாபிதா
வரகுரு நாதா மனமிரங் காதா
வாதை தராதேயென்று வோதியும் ஏழையென்மேல். (வர்)

வேலைய்ய னேமி தரும் வெள்ளைச்சாமி
தனக்கருள் காமி
வித்தக சித்தர்கள் நத்துங் குமாரசாமி
விளங்கு மிப்பூமி தொழுங் கந்தசாமி
வீம்புசெய்தா லென்ஜென்மம்போம் வழியாணரியேன்.(வர்)

---

ஆண்டவா ஆடுந்தில்லை தாண்டவா என்ற மெட்டு.

பல்லவி.

வேண்டினேன் வேலைய்யன்றுள் தீண்டினேன்.

அநுபல்லவி.

மிகவுசிதத் தோடக மகிழ்ந்து யென்
னிருதயமதி லுதிமரை கொண்டு. (வே)

சரணங்கள்.

ஆகமக்களஞ்சிய மெனக்க ருமையா யுரைக்கும்
அய்யனே அய்யனே அய்யனே அய்யனே
அரனொடு குருமுனி நர்க்கீரற்கும்
அருண கிரிக்கும் குருவாய்வந்தோனை. (வே)

சத்தியளித்த வேலெடுத் தரக்கரைத் தொலைத்த
சண்முகா சிவசண்முகா சிவசண்முகா சிவசண்முகா

நான் சதுரினி றப்புகுந் திசை பலடயின்
றதிசயமுர அனுதினமுனே. (வே)

கானகக் குறவர்குல மானினைக் கலந்தனைந்த
கந்தனே சிவகந்தனே சிவகந்தனே சிவகந்தனே
உனைக் கருத்தில் நினைத்து பஜிக்கவரியா
கசடனுனது அருள் நிலைபெற. (வே)

தேவகுஞ்சரீ தனக்கிசைந்த மணவாளனான
தேசிகா குருதேசிகா குருதேசிகா குருதேசிகா
செந்தமிழ் தந்தருள் மைந்தன் வெள்ளைச்சாமி
விந்தைய தாகவே சந்தத முந்தனை. (வே)

---

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

(6) வழிவிடைப்போன அத்ரிஎன்ற வர்னமெட்டு.

பல்லவி.

முருகன் செயலால்நமக் கொருகுறைவும் வருது
முற்றிலும் பக்திசெய் மனமே. (மு)

அநுபல்லவி.

அரனார் திருச்செவியில் அமுதமொழி நிரைத்து
அன்னைதரும் வேல்கைகொண் டுன்னத மயிலேரும் (மு)

சரணங்கள்.

வருமருண கிரிக்கு வரையவொண் ணுப்புகழைத்
தருங்கிருபைத் தயாளன் தணிகைமலைச் சுந்திரன்
பெருமைபெருங் கெம்பீரன் பிரணவப் பொருளாளன்
பிர்மன்றனைச் சிறையில் பிடித்தடைத்திடுந் தீரன். (மு)

வர்ணக் கிண்கிணியென சொர்னமா மொழிபேசி
வாதுகூறிடும் அன்னை வள்ளீதனை யணைத்துப்
பொன்னகரினிற்சென்று போற்சேனை பதியாகிப்
புகழிந்திரன் மகளை அகமகிழ்ந்து அணைத்த. (மு)

கருணை கருனந்தன் கண் யமிகு கெம்பீரன்
கந்தன் குகன் கடம்பன் கார்த்திகேயன் சிங்காரன்

அருமாமறை வேதியர் அர்ச்சிக்க மகிழ்பாதன்
அருமையாய் வெள்ளைச்சாமிக் கரியதமிழ் போதிப்போன். ()

---

இராகம் - நாட்டை - தாளம் - ஆதி.

(7) உன்பாதமே துணை என்ற வர்னமேட்டு.

பல்லவி.

என் காதர்க் கினியவா
கருணை செய்வாய் வாழ்வாய். (என்)

அநுபல்லவி.

உன் சேவை தந்தெனை யாளுமையா
உளமகிழ திவித ஹிதபுளகிதவருள்
நடமிடு மயில்முது கிடையமர் வடிவே. (என்)

சரணங்கள்.

இனி உய்கவே செய்குவாய் இக்கணமே-இனி
தனி பொய்யா மறைமுடிவை மிக்கவுமே
ததி மெய்யா யெனக்கருள வேண்டுமையா
மிருமதுரிதகவி புகலடியவர்மிடி
விலகிடவிடு அருள்நடன விநோதா. (எ)

தனி வேல்கை கொண்டோங்கிய சண்முகனே-தனி
இனி மேல் கிருபை பொங்கியே யாள்பவனே
தகை சேர் தணிகாசலம் வாழ்பவனே
தருணமிது வுனது அருண வுதயபத
கருணையதனை தா திருவருள் புரிவாய். (எ)

அரு மாமறை தொழுங்குகா அருகினில்வா-அரு
குரு வாய்வரந் தரத்தகி வெகு யினிவாய்
திரு வாய்திரந் தொருதரம் மிகு கனிவாய்
திர மிகு வேலைய்ய னரும்பதம் பணிவெள்ளைச்
சாமிக் குனதருள் நேமத்தாள்தா. (எ)

(8) பாவியென்னை ஏனடிக்குராய் என்ற வர்னமேட்டு.

இராகம் - தன்யாசி - தாளம் - ஆதி.

பல்லவி.

அன்னைவள்ளீ தெய்வானையோடு
அழகு டன் வா. (அன்)

சரணங்கள்.

உன்னதமதான செம்பொன்
வன்னமா மயில்மீதேறி
நன்னயம தாகமோன
ஞானநிலை தானேதற. (அன்)

வாக்குமன லுக்குமெட்டா
வடிவேவன் தென்குறையை
தீர்க்கமனம் நோக்காவிடில்
சிருவனும் பாடென்ன (அன்)

தீனதயாள ரென்று
சேனமரை பேசுவதால்
ஞானம் வெள்ளைச் சாமிக்குநீ
நவிலத்தடை செய்யாதே. (அன்)

---

(9) பகுத்தராஜமு ஜாயுரே என்ற வர்னமேட்டு.

பல்லவி.

1. வடிவேலு மயிலோடுசண் முகம்வருக. (வடி)

அநுபல்லவி.

2. மிடிதொலைங் தோட உனதருள் வந்துகூட
மிகவேக மாய்க்கோகன மாதிரு பேருடன். (வ)

3. காளைக்கு மரக்கந்த வேளேநீ யல்லாதிந்த
காலத்தி லுதவுவோ ருரைய்யா (வ)

4. வேளைச் சுரபூபதி தாளைப் பணிந்தேன்கெதி
வேறெனக் குண்டோசொல்வாய் கிருபாநிதி. (வ)

6. இல்லையெனும்மாய்கையில் மல்லைபுரியவிட்டாய்
இடர்களுனக் கென்செய்தேன் யேழையைய்யா. (வ)

பூமி புகழுங்கந்த சாமியெனக்குகந்த
பொருள்தா வெள்ளைச் சாமியின் மனமகிழ. (வ)

---

10. அலைசேர் கடல்சூழ்வுலகில் என்ற வர்னமெட்டு.

## வண்ணச்சந்தம்.

பல்லவி.

அருமாமறையோர் தினங்கனிந் தகமகிழ் தருமருமணியே
ஆலிலை மீதமர் மாதவன்
அரும் புதல்வியைத் திருமணம்புரி (அரு)

அநுபல்லவி.

திருவே திருவின் வுருவே
ஜெகம்புகழ் மணங்கமிழ் மருவே
திருவரன் றனக் கருமறைப்பொரு
ளறுளுரும்வகை குருவென வரு. (மரு)

சரணங்கள்.

அரிகரி பரி வரி தலையுட
அசுரர்கள் படை நொடிதனில் கெட
அன்றமரர்ப்படை கொண்டு யெதிர்த்தவ
மிண்ட னெனைத்ததி
அதிமரகத மெனவொளிதரும்
பதமலர் சதமென தினம்வரு

மற்ப்பனையுன் பொர்க்களலின் பொற்ப்பணியை
நித்தமு நினைக்கமன மெற்க்கு சொலி
திருவடி தெரிசனந் தாராய்
செங்கதிர்வடி வெனுஞ்சீராய்

தித்திக்குந் தமிழ்மிகத்தா தேசிகா
செந்திரு வெனும்நிதி தாராய்
திகிலொடு மிடிகெட யெண்ணந்
தீவிரங் கொள்ளுவாய் வண்ணஞ்

சேர்கடம்பைத் தார்புனையும்
மார்பழகா வந்திடுவாய்

செந்தமிழின் விந்தைமிகு
சந்தமதைத் தந்திடுவாய்

திந்திந்தோ மிந்தோ மென்றென்று
மகிழ் கொண்டுதொழ

சேவலங் கொடியணி வீருய்
சேய்வெள்ளைச் சாமியைக் காருய்

தேவரென நேமமுறை
நீதிதவ ருதுபுரி. (அரு)

---

(11) அப்பனேசிவ சுப்ரமணியனே என்ற வர்னமெட்டு.

## கண்ணிகள்.

சரஹணபவ சிவகுருபரனே சண்முகக்கோனே
தமியன் மிடியால் தவித்து வாடுரேனே இது
ததியெனக்கறு ளகமகிழ்ந்தர
தயவுநீபுரி சமரமாபுரி. (சர)

அரவணிசிவ சங்கரன்மகனே அரிதிரு மருகனே
அருந்தமி ழெனக் கன்புருங்குகனே அந்த
ஆதிசத்தியின் சேதியைப்புனைந்
தாக்ரமித்திடும் வேல்க்கை யேந்தியே. (சர)

யேழை எந்தனை யாளத்தகாதா யே குருநாதா
யிணையில்லாக்கவி இன்புரத்தகாதா இனி
யேது கந்தைய்யா வாதுசெய்வது
பாதுகார்ப்பதா ரேதிடுந் ததி (சர)

தேங்கமிழ்ப்புன மோங்கிய குரமின் தனைப் புணர்ந்திட
வேங்கையாய்கவிந்தோங்கிநின்றாய்முன் இந்த
ஜெகமதிலிக சுகவஜீகா
பகவாநீயென மிகவும் வேண்டுரேன் (சர)

வேளையாகுது நாளைப்போக்காதே விம்பு செய்யாதே
விகசிதமயிலேறி இப்போதே மிகு
விரைவுடன் வந்து எனையாள் பரிந்து
வேலய்யன் சுகத் தாளிணைப்பணி
வெள்ளைச்சாமி மனமிகக்குளிர
அருள்விள ம்பியதிரு
வேடச்செந்தமிழ் விந்தை மிகப்பெற (சர)

---

இராகம் - தர்பார் - தாளம் - ஆதி.

12. சுக்ரீபா சுகந்தாஞ என்ற வர்னமெட்டு.

பல்லவி.

மரகதமா மயின்மேல் வாசா இந்த
மகிதலம் புகழ்ந்திடும் வரகுணநேசா. (மர)

அநுபல்லவி.

திறமுடன் திருப்போரூர் ஸ்தலமதில் நாளுந்
திகுதரீ கிடவென திருநடமாடும். (மர)

சரணங்கள்.

தாருகா சூரர்கள் தம்மையே ஜாட
தவம்செய்யும் முனிவர்கள் தனிச்செயம் போட
ஆராதனை செய்து அன்பர்கள் தேட
அகமகிழ் வுரஅதி சயநடம்புரி. (மர)

திருஞான சம்பந்தக் கவிப்புலவோனே
திகழ்சதுர் மறைவிரித் தார்க்குரைப் போனே
அருண கிரிக்குமுன்பு அருளிய தேனே
அன்னைகுஞ் சரிவள்ளி அழகாயமரும் (மா)

வருமிடி தனைக்கெட வதைப்பவ ரெனவே
வளம்பெறு பதந்தனை நினைவினி லுரவே
அருந்தமிழ் முறைகொண்டு அகமகிழ்ந் துனையே
ஆவலுடனே வெள்ளைச்சாமி போற்றும்.(மா)

---

இராகம் எதுகுல காம்போதி தாளம் ஆதி.

**கண்ணிகள்.**

எனக் குமதுர கவிப் புலமையை
இன்றே தாருமைய்யா
கனத்தவிசித்ரக் கானமயிலேறி
காலில்ச்சதங்கை வோலமிட வந்து. (என)

மனத்துற்றகுறை தனைத்தவிர்த்திட
வா வா வேல்முருகா
இனிக்கணப்பொழுதேனுங் காலம்வீண்செய்யாமல்
கார்ப்பே னுன்துயர் தீர்ப்பே னென்றுநீரென.

பெருத்தவரத்த ருத்தை யருத்த
தசர் தர்க்குப் புத்திரன்
அந்தக்கருத்தநிரத்தை யுரித்தோனாகிய
கண்ணனெனும் மணிவண்ணன் றன்மருகா. (என)
வனப் புனக்கிளி தினைக்கனமானை
வாதாடுஞ் செங்கதிர்வேல்

இனி வுனைத்தொழு மன்மதினைப்புனை
வெள்ளைச்சாமிமீதரு ளாகவேதிரு (என)

---

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

சித்ரக்கை வேல்வருக கனமேவும். (சித்)

அநுபல்லவி.

சித்தத்திருக்கும் வினை களையரச்
சேதித்து உந்தன் சம்பாத்தியத்தைத்தரச். (சித்)

சரணங்கள்.

உரித்தானோ ராரினிக்கார் எனக்கு
உரித்தானொ ராரினிக்கார் உமைமகிழ்
வுர அருள்திரு வுருவிது வெனுஞ்.(சித்)

வாது செய்வதளகோ வள்ளலேநீ
வாது செய்வதளகோ அடியேன்மேல்
வர்மம் செய்தல் தர்மமலல கார்க்க.(சித்)

மெத்தத்துக் கத்திலுற்றே அனுதினம்
மெத்தத்துக் கத்திலுற்றே மிகக்கெடும்
வீணனென்னையாளக் கானமயிலேறி.(சித்)

வெள்ளைச் சாமிமுன்வரத் தடையேனோ
வெள்ளைச் சாமிமுன்வரத் தடையேனிவ்
வேளைக்கிரங்கி ஜாலஞ் செய்யாமலே.(சித்)

---

வருகுரூரிருவர் என்ற வர்னமெட்டு.

இராகம்-ஆரபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வருகுவாய் குகனே மயின்மீதேறி. (வரு)

சரணம்.

குருவாய்வந் தருள்தரக் குமரா தருணமையா
குஞ்சரி மகிழ்ந்திடுங் கோவே ஞானங்கதிக்க. (வ)

வீரு மறக்சர்தம்மை கூருசெய்த வொய்யாரா
விதிமால் தேடர்க்கரியா விமலரருள் செந்தூரா. (வ)

கான வேடுவர்குல கன்னி தனக்கிசைந்த
கதிர்வேல் முருகாவுந்தன் கருணை யெனக்கருள. (வ)

தஞ்சமுனை யல்லாது தமியேனுக் கார்வோது
பஞ்சைமுறை கேளாதேன் பணிந்தே னினியாகிலும். (வ)

வேணக் கவிக்கடலார் விவே-கி நாரணர் தந்த
வேலைய்ய னருள்மைந்தன் வெள்ளைச் சாமிக்குகந்து. (வ)

---

இராகம் - அட்டாணா - தாளம் - ரூபகம்.

பல்லவி.

உடனே யெனக்கோ ருத்தாரந் தாருமையா
கதித் தோங்கிய வேங்கை
மாமான வேலரே.

அநுபல்லவி.

ஜடமாய்கை தனில்க் கெடவோ அடியேன்
மிடியேதுலைக்க வடிவே லெடுத்து. (உ)

சரணங்கள்,

வாடியுழன் று வதைப்படு மிவ்வேழை
தேடிக் கெட்டோடித் தவிர்ப்பேனோ வீண்நாளைப்
பாடிக் கொண்டாடிப் பகுத்தரி தமிழை
பக்ஷத்துட னேதத்தி இச்சைகசி பக்ஷத்தொடு. (உ)

வெள்ளைச்சாமி விள்ளுஞ் சொல்லைப் பூண்டருளுஞ்
சள்ளையிது வென்று தள்ளிடாது நீருங்
கிள்ளைமொழி சேரும்வள்ளி தெய்வசேனை
கிரிநேர்முலை மடவாரொடு மயிலேரியே ஓயிலாகவே. (உ)

பழனியாண்டவனே என்ற வர்னமேட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவ சுப்ரஹ மண்யமே சிவமே இந்த
ஜெகமதையதி விபரிதமொடு
மகவெனபெரு உமைமகிழ்தரு
திகழ் சதுர் மறை முடிவதி லுரை
இக சுக குக அகமகிழ் தருஞ் (சிவ)

அநுபல்லவி.

பவவினை பொடிபட நடமிடும்
பரிதி யுதயமென வொளிர்தருஞ்
தவ விவேகியர் சாற்றற்கிசைந்திடுஞ்
தகைசேர் சிகிவாழ் சண்முக
மகிபா குறமின் குஞ்சரி
தான் கொஞ்சுந் தமிழ் சுந்தர
னேவந்திங் கொருவரந்தர
தாயம் நீயெனவே துதி
யேபுரிந்தே னெனையாதரி (சிவ)

சரணம்.

தருணமிது வாரும் ஜாலம்வீண் செய்யாது
கருணை யருளிய கந்தய்யா மெய்யோது
வருமிடி தனைத் தவிர்த்தாளுவ தெப்போது
வந்தெந்தன் கொடு துயருற
சிந்துந்தன் பதமலர் பெற
வாகை வேலனே செய்யும்
வாது தாளே நானுய்யும்
வாருநீ தேருதல் நேருராக்
கூருமோ குருயி குய்வரும்
வடிவேலனே வருவாய் ததி
அடியேன் வெள்ளைச்சாமி துதி. (சிவ)

---

வேலனே இந்த வீணையேன் படைத்தா யென்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தேசிகா செந்தேன் மதுரித மிகு தமிழ்தா
சம்போ தினமு மிகுத்த கன மானசித்த
தனைக் கொடுத்துமே யெனையாளுஞ் சிவ (தே)

அநுபல்லவி.

வாசிவா வென்றுநான் னேசித் தழைத்தேனுன்
வாகு வலயமே துலங்கிடத்
தாக்த் தகுத் தத் தோமென வாருங் (தே)

சரணங்கள்.

அன்னை வள்ளி தெய்வ யானை மகிழ் தரும்
அர்ப்புதமே மிகுங் கர்ப்பனை கள்சேரும்
பொன் மயூர மேரும் புண்யா யெனைக்காரும்
புகளரியாக் கனகட்லே
இகபரசுக மக மகிழ்தருள். (தே)

மின்னையாள் தேவர்கள் மீதி லன்பு வைத்து
சின்ன பின்னமாய்ச் சிரச் சூரருவித்து
அன்னாள் அமரர்க் கர சாக்ஷி வொப்பித்த
அதிமோகன மயில்வாகன
அயல் வேலொடு வொயிலாகவே. (தே)

வேலையன் தன்னருள் வேடிக்கையாய் பெரும்
வெள்ளைச் சாமிபுகல் வித்தைக்கு நீகுரு
ஜாலஞ் செய்யாதிந்த நாளைநீர் கண்பாரும்
தருணத் தினி லருளுற் றிடுஞ்
சரவணபவ சிவ குருபர. (தே)

வடிவேல் முருகையனே யென்ற மெட்டு.

இராகம்-முகாரி-தாள-ஆதி.

பல்லவி.

இனியு மெந்தன் மேல் வாதோ இப்படிச்செய்தால்
யேழை யெப்படி யுய் வதோ இனி

அநுபல்லவி.

கனிவாய் திருந் தொருசொல்
இனிதா யுரைக் கொண்ணுதோ
தனிகாசலம் வாழ்சுப்ர மணியே யென வந்தித்தும். (இ)

சரணங்கள்.

இந்தத்-தினையனு னுந்த னினையை யனுதினம்
நினைவி லடைவுடன் கனவி னும்மா
வேனே யெம் பெருமானே—என்முன்
வரவுமென தடை மரகத மயிலின்
முதுகில் நடமிடு குரகத வொளிரு
மாதுவள்ளியின் கோனே எனையித்தி பாதுகாருஞ்
சீமானே (இ)

மஞ்சு தவிழ் சடை கொன்றை நதியணி
யெந்தை சிவகுரு சிந்தை புளகிட
விஞ்சை யோதிடும் மேலனே அந்த
வெஞ்ச ரோருக பஞ்ச பாதக
துஞ்சு சூரர்க ளஞ்சி யோடிட
வேலை யேவிய சீலனே உமையளித்த
வேலை யேந்திய பாலனே சம்போ. (இ)

பூமி புகளுஞ் சிங்கார வேலைய—நேமியருள்
வெள்ளைச் சாமி தமிழினைப்—பூண்ட
புயவொய் யாரா வுன் மேல்க்
காமியா கியே யான் மயங்குரேன்
சாமியே தயை யே புரிந்திடத்
தாமதமேன் கெம்பீரா—இதுவுனக்கு
தர்ம மாகுமோ செந்தூரா (இ)

---

காலன் பாசத்தினாலே யென்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாதர்க ளாசை யடாது அந்த
மார்க்கத்தை நினைத் தாலே வருந் தீதுமரு (மா)

அநுபல்லவி.

மா னி லந் தனில் வசைபெறும். (மா)

சரணங்கள்,

வித வித லீலை சத மெனத் தரும்
அதீ வித நயமுள்ள. (மா)

மதிமுக மிதுவோ வென்னச் சதிசெய்யு மொய்யாரிகளான.
கண்டை நிகர் பெண்டு மொழி யுண்டுமெனக்
கண்ட பேர்கள் நின்று திகைத்திடவல்ல (மா)

மருவிரு கருகுரு மணலெணக் கரீய பெருகுள ளழகியர் ()

இடைகொடியோ கடைபிடியோ
இலையோ அலதோ வுளதெனும். (மா)

மிடர்கமு கென்றிட நினையுங் கெடுமிடியர்கண்
படவே அன்னநடை நடித்திடும். (மா)

மதுரிதம் பெருகிய ரதியெனச்
சதுருடன் கீதம் மதுரமாய்ப் பாடும் (மா)

பெருகிய யிந்திர ஜாலக் கள்ளி களின்
பேச்சையெடுக் காதே மோச்சம்பெற நின்ற
அருணகிரி யார்க் கருந்தமிழ் போதித்த
அர்ப்புத ஞானக் கிருபை பெற்றிடவே
வுய்த்திடுவாய்

அருந் தமிழ் பழகிய வாசன்
அத்வித வேலைய னேசன்
பொர்ப்பதம் நினையும் பிர காசன்
புகழ்பெறும் வெள் ளைச்சாமி சொன்ன. (மா)

---

9 B
8-15-7

அரிவோம் நன்ருக குருவாழ்க யென்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

யேக சரணம்.

அருமா மறை புகழுமையா ஆதிநிலய
அரிவோர்க வாரும் மலர்க் கையா—உந்தனருளைப்
பெருவேனே பேசுமுருகையா பேதையென் னெஞ்சம்
பித்தே பிடித்தே திகைத்தே வருந்து மிவ்வேழைக்
இரங்கியோர் சொல்
பத்தாவுன் சித்தந் திகைத்தே வருந்ாதே யென்று
பகரொண் ணுதோ
எத்தாயு னேத்தான் தவிர்த்தாலு ரித்தானே முரு
பதில்நீர் கூரும்
பைம்பொ னிலங்கு பதங்க டுலங்கிடத் தானே
பதஞ்செய் யென்று
யின்பனிரைந் தருள் கந்த மெனத் தருவோனே
ஞானக் கடலே
ஞானவமுர் தச்சுவை தானுயுண ர்த்திடுஞ் சீமானே
தந்தைநீ தானே

என்மே லினி வாது வன்மமே செய்யாது
பொன் மயூர மீது சின்மய பூமாது
தேவ குஞ்சரி யோ டரும்புன
மேவிடுங் கிளி தேன் றரும் வள்ளியோடு
பொன்மய மான

சித சித்திர வதை தொழல் கற்றிடு நெடு
மரு பொற் படை யொடு நேரே—வருவதற்கு
நிகரிலாத புயகிரியன் சீர்துலங் குமரிய சேவலது

தானய் நிருத்தியதோ
நிந்தை வையா தேயிச்சூதே
செய்யாதே யென்மீதே—சுகமுடனே.

கந்தா வந்துகந்து காருந் தப்பாது
கதிர் வேலையன் பதம் பணிந்திடுஞ் சாது
சுந்தரன் வெள்ளைச் சாமிகவிக் கினிமீது
சொற்சுவை முத்தமிழ் மிக்கநீ யோது. (அரு)

---

பத்தரைமாற்றுப் பசும்பொன் யென்ற வர்ணமெட்டு,

இராகம்-அட்டாணு-தாளம்-ரூபகம்.

கன்னிகள்.

சித்திர ரத்ன மிழைத்த பதங்களால் நானே பாடிச்
சித்தங் களித்திட ப்பதம்ப் பதம்பணிந் தேனே
யெத்திசையும் போற்றும் உத்தம பூமானே
யெற்குமன மூட்குளிரத் தக்கபடி நெக்குருகிச். (சி)

மிக்கக் கருணையெ னக்கரிவிப் பையோ கோனே
நீ வீம்பு செய்தால் மனந்தேம்பித் திகைத்திடு வேனே
தக்கப் புகழ்பெருந் தணிகாசலத் தேனே
சந்ததமு மூந்தனையே மைந்தனும் வந்தித்தித்து மிகச். ()

பக்குவமா யுந்தன் பக்கம் நிர்க்கும் பிருகோதை யுடன்
பரிந்து வந்து செய்யும் பாடல் நட்த்து மிப்போதே
திக்குகள் நெக்குருகத் தொடும் வேலவா
சிருவனுன திருமலரை அனுதினமுங் கனிவுடனே. (சி)

வேலைய்யன் பதத்தைச் சாலப்பணி வெள்ளைச் சாமிதன்முன்
வித்தகனே வரவென்ன தடையதைக் காமி
காலை மாலையுந்தன் காப்பணிந் தேன்வாருங்
கனகோபுர மதில்வாழ் வுருங் கருணுகற முருகாவாச். (சி)

---

வேளையிது வேல்முருகா யென்ற மெட்டு.

பல்லவி.

தென்பழனி வாழ் குமரா கன
தேவர் புகழ்ந் தேற்றுந் தீரா சுந்தரு. (தெ)

அநுபல்லவி.

வர்மஞ் செய்வதடாது வாதை தருது யிப்போது
என்முன் வரத் தடையேது யெந்தையே
எந்தனுக் கோது சிந்தைமிகத் தளரா்து. (தெ)

வண்டு ரீங்காரமிடும் வனந்தனில்க் குயில் பாடும்
கண்டு மயில் நடமிடும் தொண்டர்துயர் விலகிடும்
கண்டால்ப் பெரும்பதந் தரும். (தெ)

வெள்ளைச் சாமி சொல்முரை
கிள்ளைச் சொல் போலுண் போரை
வள்ளல்தினம் வந்து கார்ப்பாரே—கள்ளமில்லை.
உள்ளது பாரே தெள்ளுதமி ழுள்ளுரைசீரே. (தெ)

---

இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி.

பல்லவி.

உன்னதிசயங் கேட்க வுருகுதே எந்தன் நெஞ்சம்
உன்மன முருக லையோ (உன்)

அநுபல்லவி.

சன்னதி தனில் வரும் சகலஜீவ ருசிக்கும்
சகியாத குரை தீர்க்கும் சண்முகத் தரசரே. (உ)

சரணங்கள்.

சூரபுத் மாதிகளை துணிக் கச் சரவணையில்த்
தோத்திரஞ் செய் அருவர் சேர்த்தெடுக்க வுகந்தீர்
கார்த்திகைப் பெண்கள் பாலைக் களிப்பாயுண்டு சத்தியின்
கைவேலெடுத்துச் சமர் செய்யுங் கழுகாசலா: (உ)

அருணகிரிக் குகந்து அளித்தீர் அருந்தமிழை
அதுபோலெனக் களிப்ப தருமை யாமோசொல்
யேழை பெரும்பதமே பெரவே பிரியம்வைத் ததினாலே
பிள்ளை வெள்ளைக் சாமிமேல்க்
கள்ள மேன்னோ யிக்காலே. (உன்)

அழகிய வேலா யென்ற வர்னமெட்டு.

இந்துஸ்தான்-தோடி-அடதாளம்.

## கண்ணிகள்.

இழகிய ஞான இன்பங் கதித்தருள் வேலா
பழகிய மோன பண்டிதனே மறைமூலா. (இ)

அழகிய அன்னை வள்ளி குஞ்சரி யோடு
பளபளென் னும் புள்ளி மாமயில்க் கீடு
புவன மிசை யெள்ளவு முண்டோ பாடு
யென மறைகள் யெல்லைக ளில்லாது தேடும் (இ)

வாதுகளேன் வருந்துரேன் வெள்ளைச்சாமி
வோது வோர்கட் குவந்தருள் கந்தசாமி. (இ)

---

கண்ணிகள்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பீஜாச்சரி சங்கரி சாம்பவி
பிறைநதி யணியரன் பாரி
வரந்தரத் தடையேன் மாரீ (பீஜா)

ல்ம்போதரீ ராகக் யான வீரீ
லக்ஷ்கக்ஷண அர்ப்புத வாரீ
இத்ததி வரந் தருந் தீரீ (பீ)

பேசொண் ணாதோ வுன்வாய்நோகுமோ அம்மா
பேய்பிள்ளை யாகிலுஞ் சும்மா
யேய்ப்பது சரியோ அம்மா (பீ)

சகியே னினி ஜாலஞ் செய்யாதே
சங்கரீ யேழை யென் மீதே
தயவுவைத் தெனையா ளிப் போதே (பீ)

மகிழ்வாய் வெள்ளைச் சாமிபுகழ் தாயே
மறை யோதிய பெரியோ றருள்
பெரும்வா ரெனக் கருள் வாயே. (பீ)

149234
008.

ஸ்ரீராகம் - அதிகசுந்தர நயசரசி என்ற வர்னமெட்டு.

பல்லவி.

அருமுக குருபர அகமகிழ் வொடு வாராய்
அடியேன் முன் சீராய்.

அநுபல்லவி.

திருவடிதினம் பணிந் திடும் பணிதாருய்
ஜெக மதைத் தனிவலம் வருகு மொய்யாரு. (அ)

சரணங்கள்.

அருமறைப் பொருளதி காரச் சுந்தரனே
அயனைமுன் சிறைதனி லடைத் தகெம் பீரனே
அரிவைய ரிருவ ரோடக மகிழ்வுடனே
தரிகிட வெனநட மிடுமயின் முதுகேரி. (அ)

வகையறியா யிந்த யேழை யென்மீது
வருத்தங் கொண்டால் பின்புவுய் யும்வா ரேது
திகைக்கவேண் டாமென வோர்மொழியோது
திருவரன்றனக் கொருமுறை குருவென வரு. (அ)

வேலாயுத மெடுத் தாண்டிட வாராய்
வேலைய தேசிகன் தாளினைச் சீராய்
சாலப் போற்றும் வெள்ளைச் சாமியைக் காருய்
சருணஞ்செய் தேனிது சமயம் வரந்தருக. (அ)

---

கண்ணிகள்.

சமரா புரிவாள் சண்முக தேசிகர்க்கு
விலையா ளெனவே மிகுசொர்ச் சுவையுடனே
இயலிசை பலகொண்டு கவி பாடுவதால்
இருமைச் சுகமளிக்குஞ். (சம)

அழகாகிய வேல்விடுத்த சுரர்கள்குல முழுதேங்கிடவே
அமரர்குலங் கெலிக்க
அதிர் துந்துமி யொலிக்க அகமகிழ் நாதன்
அடந்த சோலை மிருந்த. (சம)

026:4(?)

சரணு கெதியாய்த் தமையடுத் தவர்கட்கு
தயவே புரிவோன்
தரையிற் புலவர் சித்தங்
குறையயற் றிலகும் வகை
தரும் வித்வயூகன் அதி யர்ப்புத மிகுத்த. (சம)

குருவேலையனுர் அருமைப் பதமலரை
தமிழ் மாமலருல்
தினந் துதித்துத் துதித்து
மனங் கதித்துக் குதிக்கும்
பொருள் வெள்ளைச் சாமிக்கருள். (சம)

---

சத்தி வடிவேல் முருகையா என்ற மெட்டு.

பல்லவி.

நன்மை தந்தாள் சண்முக நாதா
நடனப் பாதா. (நன்)

சரணங்கள்.

என்மனத் துதிக்கும் வேதா
இயலிசை யளிக்கும் போதா
வன்மஞ் செய்வதேழைஎன் மீதா
வாகுரு நாதா. (நன்)

இன்னமும் என்மீதில் வாது
யேதுயென் பாவம் விடாது
உன்னையல் லாலிப்புவி மீது
உதவி யேது. (நன்)

வள்ளியாள் மகிழும் மோகா
புள்ளிமா மயில்ச்சே வகா
வெள்ளைச் சாமிதனக் கருள் யோகா
வித்வவி வேகா. (நன்)

---

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

சுந்திர மடமயிலோ என்ற வர்னமெட்டு.

பல்லவி.

சிங்கார வீரசத்ரு சங்காரவேல் விநோத
சுந்தரக்குகன் வருக—அமரர் சேனு
பந்தமுடையோன் வருக (சிங்)

அநுபல்லவி.

மங்களம் நிரைந்துலவிப் பொங்கும் போரூர்மா நகரில்
தங்க மயில் மீதில் வீற்ருசனமிட் டெங்களைக் காக்கும்(சிங்)

சரணங்கள்.

தந்தைக் குகந்து வந்து மந்திரத்தைப் புகன்ற
தகை பெருகுரு நாதா சகல கலை
விந்தையாக்கத் தகுந்த யெந்தைவே லையனுக்கு
விரிதமி ழுரைபோதா விவேகமோகக்
கந்தைய யென்துய ரந்தனை யகற்றிடக்
கருணை யின்னும் வருதா கமலப்பாதா
சிந்தை வருந்திய யேழை யென்மீது
செந்தமிழ்ச் சந்தங்கள் பொழியுந் தப்பாது
மைந்தன் வெள்ளைச்சாமி கவிக்கினி மீது
மதுர மிகு நயன மொழிதர யிது தரி (சிங்)

---

ஆதிமூலனே சரணம் என்ற வர்ணமெட்டு.

ஸ்ரீராகம் - தாளம் - ஆதி.

பல்லவி.

யேனேசங் தேக மினியே யென
தெதிர்வர முருகரே (யேனே)

அநுபல்லவி.

தானய் முத்தொழிற்கும் வித்
வானய் வந்த மெஞ்ஞான (யேனே)

சரணம்.

நானாவித ரூபலா வண்ய தீரா
நடன மயின் மீதேரி வருக வொய்யாரா
சேனாபதி யென தெதிருக வாராய்
தெள்ளுதமிழதை யென்னுள்ளங்குளிரவோத (யே)

ஞானோதய சுரக் யான சங்கீதா
மோன தீத மெஞ் ஞான சமேதா
வானோர் பணிந்திடும் வண்மலர் பாதா
வடிவே லொடுவர் சண்முக நாதா (யேனோ)

மாவனந்தனில் வள்ளி மாதினைத் தானே
மதகஜ னுதவியால் மணந்திடு வோனே
மேவிய வேலையன் பதமலர் தானே
மிகப்பணி வெள்ளைச்சாமி மனமகிழ் தறவர(யே)

இராகம்-ஆனந்த-பைரவி பல்லவி. தாளம்-ஆதி.

பெரும்பே றெனக்குவிண்ட அரும்பதத்தினை யுண்டு
பிர்மானந்தங் கொண்டேனே (பெரு)

அநுபல்லவி.

கரும்பே கனிரசமே கர்ப்பகப் பூங்காவே
ஒருங்கே குவித்துவைத்த உன்னதப் பசும்பொன்னே

சரணங்கள்.

திரும்பா திருந்த நெஞ்சந்
திரும்பிற்றே யினிக்கொஞ்சந்
திரும்பிப் பாரெனைப்பெற்ற அய்யா
அரும்பாவி யான்செய்த அதர்மங்கள் பொடியாக்கி
அர்ப்புதக் கவிசெய்யுங் கர்ப்பனையு முண்டாக்கி (பெ)

வன்னக் கனகமயில் வாகனனே உன்னயில்
வனப்பனைத்தும் வரைய மனத்தி னுட்புகுரைய
சின்னஞ்சிருவன் உந்தன்சேயன் வெள்ளைச்சாமிசொல்
தித்தித்து யெத்திக்கோரும் மெத்தப் புகழ்கொண்டாடப்
(பெரும்பேறெனக்குவிண்ட)

இராகம் - எதுகுல காம்போதி- தாளம் - ரூபகம்.

பல்லவி.

அருணகிரி யார்க்கருள் தந்ததைப்போல
ஆறுமுகா தருவாய் (அரு)

அநுபல்லவி.

பெருமை பெருகும் விபூதி கொடுத்தருள்
பேரருளிலக்கணக் காரிகை யேற்றி (அரு

சரணங்கள்.

தரும்பத மேன்மை சகலகுணத்திலுஞ் சம்பந்தமாகிடவே
பெரும்பதமே பெருவேனே வெனத்தினம்
பிள்ளை ட்டுஞ் சள்ளையை நீக்கியே (அரு)

யேழை பிழைப்பது யென்னபிழைப்புனக் கேர்க்கலையோ
[சாமி உந்தன்
தாளைப் பிடித்தேனிவ் வேளை வரந்தாருஞ்
ஜாலஞ் செய்தால்ப் பாலனு னென்செய்வேன்(அரு)

காலவுணச் சித்ர வேலையனே உந்தன்
கருணை யெனக் கில்லையோ இந்தத்
தாலம் புகழ்ந்திட நீலமயிலேரிப்
பாலன் வெள்ளைச் சாமி முன்னே வந்து (அரு)

---

இராகம் - ஆனந்த பைரவி - தாளம் - ஆதி.

பல்லவி.

யினியாகிலுந் தயை யவத் தென்னை ரக்ஷிக்காவிட்டால்
யேழை யென்செய்கு வேனையா (இனி)

அநுபல்லவி.

கனிவாய் நான் வந்துந்தன் கஞ்யமலர்ப் பதத்தில்
கருத்தை இருத்தவழி
காட்டியருள் கந்தையா (யினி)

சரணங்கள்.

பனியால் நனைந்து வரும் வெயிலா லுலர்ந்திப்படிப்
பாடு பட்டு அடியேன் கேடுகெட் டுழலாமல்
அணியாய் அஷ்ட செல்வமும்
அழித்து அடியேனுக்குன்
அருள் பெரு கிருபையைத் தருகமண மிழிகி (யினி)

ஆனந்த பைரவி அம்பிகை காமாக்ஷி
அகிலாண்ட கோடியெல்லாம்
அடுக்காய் அமைத்த ஆக்ஷி
ஞானங்கவி யாளர்க்கு
நாட்டியருள் சீமாட்டி
நடனி ஞானனுபவ நாயகியருள் சேயே ()

உன்னத மான செம்பொன் வன்னமயில் மீதேரி
யுகந்துவந் தெனையாளத் தகுந்த சமயமையா
வண்ணச் சரபம் சித்ர
வார்த்தைதரும் வேலய்யன்
மலர்ப்பதத்தில் பணியும் மைந்தன் வெள்ளைச் சாமிமேல் (யி)

---

மாரவேளின் ஆரவாரம் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

கந்தநாதனே வந்துகந் தெனை
கார்க்க வொண்ணுதா கடம்பணிந்திடு (கந்)

அநுபல்லவி.

எந்தவேளையு முந்தனை யேற்றிப் போற்றி
னேன் வாருஞ் சண்முக (கந்)

சரணங்கள்.

வேளை சூளுமிந்த தாலமீதி லுந்தன்
பாலன் படுந்துய ராலேவருந் துரேன்
ஜாலஞ் செய்தல் சரியல்ல வாருமையா
சகியே னினிநான் வரவேதடை யென்ன சொலுங் (க)

அன்று அசுரரைக் கொன்று அமரருக்
கென்று மகிழ்வுர நின்று கார்த்ததுபோல் என்றனைக்
கார்த்திடயே னின் னங் தாமதம்
யேது சூது வாதுகள் செய்யாது. (கங்)

வேலையன்ருள் மலர் மேவிப்பணி வெள்ளைச்
சாமிமீதில் வர்மஞ் சாதிப்ப தாகாது
பூமியதிர நடங் கொள்ளும் சித்திர
புள்ளிமயி லேரும் தெள்ளியோ னெனுங் (கங்)

---

கந்தா பரங்கிரி வாழ் கதிரேசனே என்ற வர்னமெட்டு.

பல்லவி.

உன்னையல்லா லெனக்கு உற்றதுணை யார்சொல்
வுனைவிடப் போரதில்லை முருகையனே. (உன்)

அநுபல்லவி.

சம்போ உயர்வாகிய மாமயி லேறியவா. (உன்)

சரணங்கள்.

உம்பர் புகழ்ந்திடு சம்ரம சுந்தர
கந்தனே யெந்தனுக் கிந்த உலக மதில். (உன்)

உலக மளித்திட மனதில் நினைத்திடு
மயில் மிசை நிர்த்தன நடமிடும் வடிவே. (உன்)

மைந்தன் சந்தத முந்தன் பதமது
கந்தன் பொடுதுதி சிந்தை கொடுப்பவர். (உன்)

வேலைய தேசிகர் தாளினையே துதி
வெள்ளைச் சாமியி னுள்ளத் தமர்குரு. (உன்)

---

## திரு விருத்தம்.

ஆனைமா முகத்தோன் வாழ்க
அம்பிகை வாழ்க செங்கை
மான் மழுதரித்தோன் வாழ்க
மதியொடு ரவியும் வாழ்க
மேன்மை சேர் கந்தர் வாழ்க
வள்ளியும் வாழ்க தெய்வ
யானையும் வாழ்க யெங்க
ளையர் வேலையரும் வாழ்க.

---

11

## இராகம் - பியாகு.

## மங்களம்.

14

மங்களம் ஜெயமது ரிதகவி மங்களம்.

ஐங்கர மொடு வரு கஜமுக திருவே
பொங்கர வணிசிவ சங்கர குருவே
யெங்களம் மையே வடிவாம் பிகையே
சங்கீதந் தரும் சண்முக துரையே. (மங்)

மான்மகள் வள்ளி தெய்வானை யென்தாய்க்கு
149234 மாதவ வேதப ருயணர் கட்கும்
ஆதி நாருயண சாமி தனக்கும்
அதி விதரணகுரு வேலைய ருக்கும். (மங்)

இத்தரை யாளுஞ் செங்கோல் முறையார்க்கு
இயலிசை தமிழ்வரை அரிவா ளர்க்கும்
பத்திநெரி தவருபரம ணடிய வர்க்கும்
பாலன் வெள்ளைச் சாமிகீதந் தனக்கும். (மங்)

சுப்பிரமணியர் சங்கீர்த்தனம்

முற்றிற்று.

---

சென்னை-600 008.


சிவசுப்ரமண்யம்: